
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**786**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

திரைக்கதை வசனம்
**கலைஞர் மு.கருணாநிதி**

**குமரன்தாஸ்**

**3**

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# கலைஞர் படைத்த பெண் கதாபாத்திரங்கள்!



தமிழ் சினிமா 1916-இல் தொடங்கி, ஒரு நூற்றாண்டைக் கடந்து விட்டதை நாம் அனைவரும் அறிவோம். இந்த நூறாண்டுகாலத் தமிழ் சினிமாவைப் பலரும் பல்வேறு விதமாகப் பகுத்து ஆய்வு செய்வதையும், பகுத்துக் கூறுவதையும் நாம் பார்க்கிறோம். எடுத்துக்காட்டாக சமூக அரசியல் ஆய்வாளர்கள் தேச விடுதலைக்கால சினிமா, திராவிட இயக்க சினிமா, பொதுவுடமை இயக்க அல்லது யதார்த்தவாத சினிமா என்றும், தொழில்நுட்ப அடிப்படையில் பகுப்பவர்கள் ஊமைப்பட காலம், பேசும் படக்காலம், கருப்பு வெள்ளைக் கால சினிமா, ஈஸ்ட்மேன் கலர் கால சினிமா என்றும் பகுத்துக் கூறுவதைக் காண்கிறோம்.

பெரும்பான்மை மக்களோ கிட்டப்பா கால சினிமா, எம்.கே.டி.பாகவதர் கால சினிமா, எம்.ஜி.ஆர்., சிவாஜி கால சினிமா, அல்லது கமல், ரஜினி கால சினிமா என்று கதாநாயகர்களை மையமாகக் கொண்டு பகுத்துப் பேசுவதைப் பார்க்கிறோம். ஆனால், ஒருபோதும் கதாநாயகியரை அதாவது பெண்களை மையமாகக் கொண்டு கண்ணாம்பா கால சினிமா என்றோ வி.என்.ஜானகி கால சினிமா, சரோஜா தேவி கால சினிமா அல்லது குஷ்பு கால சினிமா என்றோ கால வரையறை செய்வது மட்டும் இன்று வரை சாத்தியப்படவே இல்லை.

ஏனென்றால், நமது தமிழ்ச் சமூகம் ஓர் ஆணாதிக்கச் சமூகமாக இருப்பது போலவே, தமிழ்த் திரைத் துறையும் ஆணாதிக்கம் மிகுந்த ஒரு துறையாக இருந்து வருவதை அனைவரும் அறிவர். கதாநாயகர்களை மையமிட்டே இங்கு திரைப்படங்கள் எடுக்கப் படுவது மட்டுமல்ல, கதாநாயகர்களுக்குக் கட்டுப்பட்டே இன்றைய திரைத்துறை இயங்குகிறது. கதாநாயகிகள் என்போர் கதாநாயகர்கள் அவ்வப்போது தொட்டுக் கொள்ளும் ஊறுகாய் என்றளவில்தான் இன்றைய பெரும்பான்மையான திரைப் படங்களில் வந்து போகின்றனர்.

### ஆண் மையத் திரைப்படங்கள்

இந்நிலை தமிழ்த் திரைத்துறை தொடங்கிய 1916 முதல் நூற்றாண்டைத் தாண்டிய இன்றைய 2025 வரை அப்படியே ஒரே மாதிரியாகத்தான் தொடர்ந்து கொண்டிருக்கிறது, என்று நம்மால் சொல்ல முடியாது. ஹீரோயிசம் என்பது, இன்று அனைத்து வகையிலும் மிகப் பெரும் உச்சத்தைத் தொட்டுவிட்டதை நாம் பார்க்கிறோம். இதற்கு நேர் எதிராகக் கதாநாயகிகளின் பங்கு திரைக்கதையில் மிக மிகக் குறைந்து போய் வெறும் நடன மாந்தர்களாகப் பெரும்பான்மையான திரைப்படங்களில் பயன்படுத்தப்படும் நிலை ஏற்பட்டு விட்டது.

### நாயகர்களுக்கும் மேலாக முக்கியத்துவம்

இப்படிப்பட்ட திரைத்துறையில்தான் முத்தமிழறிஞர் கலைஞர், சுமார் 65 ஆண்டு காலம் தனது தனித்துவமான கதை, திரைக்கதை வசனத்தின் மூலமாக கதாநாயகிகளையும், பிற பெண் கதாமாந்தர்களையும் கதா நாயகர்களுக்கு நிகராக மட்டுமல்ல, பல திரைப்படங்களில் நாயகர்களுக்கும் மேலாக முக்கியத்துவம் அளிக்கும் விதமாக முன்னுரிமை கொடுத்தும் புரட்சிகரமாகவும் படைத்துக் காட்டினார். இத்திரைப் புரட்சியை தனது 23-ஆம் வயதில் திரைத்துறைக்குள் தான் காலடி எடுத்து வைத்த, 1947-இல் வசனம் எழுதிய ‘ராஜகுமாரி’ திரைப்படம் தொடங்கி, தனது கடைசித் திரைப்படமான 2011- இல் வெளிவந்த ‘இளைஞன்’ வரை தொடர்ச்சியாக நிகழ்த்திக் காட்டினார்.

> **கலைஞர்,
> தனது பங்களிப்புடன் வெளிவந்த சுமார் 70 திரைப்படங்களில் பெண்ணுரிமைப் புரட்சியைப் பேசி இருக்கிறார்.**

இந்தத் திரைப் புரட்சியை, பார்ப்பனிய நிலவுடைமைக் கருத்துகள் தமிழ்த் திரையில் மிகவும் செல்வாக்குச் செலுத்திய (1947 - 1967) காலத்தில் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உள்ளிட்ட முன்னணி நடிகர்கள் நடித்த பல திரைப் படங்களிலும் தனது திரைக்கதை வசனத்தின் மூலம் புகுத்தினார் என்பது மிகவும் குறிப்பிடத் தகுந்தது. வி.என்.ஜானகி, கண்ணாம்பாள், டி.எம்.மதுரம், எம்.எஸ்.விஜயா, பண்டரிபாய், எம்.என்.ராஜம், பத்மினி, பானுமதி, சாவித்திரி, விஜயகுமாரி போன்ற நடிகைகள் கதாநாயகர்களுக்கு சரிக்குச் சரியாக நின்று, தலைவர் கலைஞரின் கவித்தமிழ் வசனத்தை உணர்ச்சிமயமாக முழங்கினர்.

### கொள்கைப் பிரச்சாரம்

அடுத்து வந்த, பொதுவுடைமைக் கருத்துகள் பரவலாக திரையில் ஒலித்த நவீன யதார்த்தவாத சினிமா காலத்தில் (1968-1990) வெண்ணிற ஆடை நிர்மலா, லட்சுமி, மஞ்சுளா, ஸ்ரீபிரியா போன்றோர் கலைஞரின் புரட்சிகரமான வசனத்தைப் பேசிய பெண்களாக திரையில் தோன்றினார்கள். தொடர்ந்து உலகமயம் மற்றும் இந்துத்துவம் வளர்ச்சி பெற்ற (1990-2010) காலத்தில் ராதிகா, ராதா, சுகன்யா, மீனா, மீரா ஜாஸ்மின், குஷ்பு போன்றவர்கள் கலைஞரின் கருத்துகளைத் திரையில் முழங்கிய புதுமைப் பெண்களாகக் காட்சியளித்தனர். இவ்வாறு தனது காலம் முழுவதும் கலைஞர் கொள்கைப்பிரச்சாரத்தை அயராது நிகழ்த்தி வந்தார்.

### முதன்மையான எதிரிகள்

மேலும் கலைஞர் கதை, திரைக்கதை வசனம் எழுதிய திரைப்படங்களின் பெயர்களே பெண்களுக்கு அவர் வழங்கிய முன்னுரிமையை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. எடுத்துக் காட்டாக ராஜகுமாரி, மந்திரிகுமாரி, அரசிளங் குமரி, பராசக்தி, பூமாலை, மணமகள், தேவகி, கண்ணம்மா, பெண் சிங்கம், புதிய பராசக்தி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு பெயர்களில் மட்டுமல்ல உள்ளடக்கத்திலும் கலைஞரின் திரைப்படங்கள் பெண்களை, தவறைத் தட்டிக் கேட்பவர்களாகவும் அநீதிக்கு எதிராக உரிமைக்குக் குரல் கொடுப்பவர்களாகவும் சமூகத்தை மாற்றத் துடிக்கும் போராளிகளாகவும் சமத்துவத்திற்காகவும், சமூக நீதிக்காகவும் அறிவாயுதம் ஏந்திப் போராடும் புதுமைப் பெண்களாகவும் படைத்துக்காட்டின.

அதே சமயம் இத்தகைய புரட்சிகரமான செயலை அவர் ஆரவாரமாக அறிவித்துக் கொள்ளாமல், பெண்களுக்கு முதன்மையான எதிரிகளாக ஆண்களைக் கட்டமைத்து விடாமலும், திராவிட இயக்கக் கொள்கை வழியில் நின்று ஆணாதிக்கக் கருத்தியல்களையும் செயல்பாடுகளையுமே முதன்மையான எதிரிகளாக எழுதிக் காட்டினார்.

இவ்வாறு கலைஞர், தனது பங்களிப்புடன் வெளிவந்த சுமார் 70 திரைப்படங்களில் பெண்ணுரிமைப் புரட்சியைப் பேசி இருக்கிறார். அவர் படைத்திட்ட புரட்சிகரமான பெண் கதாபாத்திரங்களைப் பற்றி மேலும் விரிவாகப் பேசவேண்டும். அதற்கான உரையாடலை நாம் தொடங்க வேண்டும்.

**...காட்சி விரியும்**

---

## கல்வியில் இருந்து, விலக்கும் கொள்கை!

புதிய கல்விக்கொள்கையை இந்தியாவிலேயே முதன்முதலில் நடைமுறைப்படுத்திய மாநிலம் கர்நாடகா. 2021-ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த பசவராஜ் பொம்மை தலைமையிலான பா.ஜ.க. அரசு, புதிய கல்விக்கொள்கையை அம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தியது. 2023-ஆம் ஆண்டில் காங்கிரஸ் அரசு மீண்டும் அமைந்தவுடன், இந்தப் புதிய கல்விக்கொள்கையைத் திரும்பப் பெறுவது குறித்தும், மாநிலக் கல்விக் கொள்கையை வரையறுப்பது தொடர்பாகவும் 15 பேர் கொண்ட குழுவை அமைத்தது. அந்தக் குழு இதுவரை தங்களது வரைவறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை.

இதனால், புதிய கல்விக்கொள்கை இன்னும் அம்மாநிலத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதன்படி மும்மொழிக் கொள்கையும் கடைபிடிக்கப்படுகிறது. மூன்றாவது மொழியாக எந்த இந்திய மொழியை வேண்டுமானாலும் படிக்கலாம் என்று, தமிழ்நாட்டில் பா.ஜ.க. சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால், கர்நாடகாவில் மூன்றாவது மொழியாக இந்திதான் கற்பிக்கப்படுகிறது. 6, 7-ஆம் வகுப்புகளில் இந்தி கற்றுக்கொடுக்க போதிய ஆசிரியர்கள் இல்லை. பா.ஜ.க. ஆட்சியில் இருந்தபோதும் முழுமையாக இந்தி ஆசிரியர்களை நியமிக்கவில்லை.

இப்படி, கற்றல் குறைபாட்டோடும், அதனால் ஏற்படும் மனச்சுமையோடும் இருக்கும் மாணவர்களுக்குப் பத்தாம் வகுப்பில் கட்டாயப்பாடமாக இந்தி வைக்கப்பட்டுள்ளது. 2024-ஆம் ஆண்டில் மட்டும் 90,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்திப் பாடத்தில் தோல்வி அடைந்துள்ளனர். எந்த வகையிலும் பயன்படாத ஒரு மொழியைக் கட்டாயமாக ஏன் கற்க வேண்டும், மாணவர்களை ஏன் இவ்வளவு நெருக்கடிக்குள்ளாக்க வேண்டும் என்று கர்நாடக மாநிலக் கல்வியாளர்கள் விமர்சனங்களை வைக்கத் தொடங்கியுள்ளனர். கல்வியில் இருந்து மாணவர்களை விலக்கும், இந்தித் திணிப்பை நீக்க வேண்டுமென்று குழந்தைகள் உரிமை அமைப்புகள் பரப்புரையைத் தொடங்கியுள்ளன.


ஆபத்து வந்த பிறகு விழி பிதுங்கி நிற்கிறது, கர்நாடகா;
வருமுன் காப்போம் என விழிப்போடு எதிர்க்கிறது, தமிழ்நாடு!

---

## ஃப்ளாஷ்பேக்



## தலைவர் காலடியில் விழுந்த கல்!



கி.முகுந்தன்

1984-இல் சட்டமன்றத் தேர்தலின்போது, பெரம்பலூர் தொகுதி கழக வேட்பாளர் திருமதி. சரோஜினி தங்கராசுக்கு வாக்கு சேகரிக்க வருகை தந்தார் தலைவர் கலைஞர். பிரச்சார மேடையில் தலைவருடன், கழக முன்னோடி அய்யா அன்பில் தர்மலிங்கமும் அமர்ந்திருந்த நேரத்தில் பக்கவாட்டி லிருந்து ஒரு சிறிய கல் அ.தி.மு.க.வினரால் வீசப்பட்டு, அது தலைவர் கலைஞரின் காலுக்கு சற்றுத் தள்ளி விழுந்தது. அதை தலைவர் பார்க்கவில்லை. நானும், சிலரும்தான் பார்த்தோம். உடனே நானும், பெரம்பலூர் ஒன்றிய மேனாள் பெருந்தலைவர் மு.அட்சயகோபால் அவர்களும் தலைவர் அருகே நின்று கொண்டோம். வேட்பாளர் சரோஜினி தங்கராசு வாக்கு கேட்டு பேசிக் கொண்டிருந்தார். அன்று பிரச்சாரம் முடிந்து, ஆத்தூருக்குச் செல்லும் பொழுது தலைவரின் காரை அ.தி.மு.க.-வினர் மறித்து ரகளை செய்தனர். அப்போதும் தலைவரைப் பாதுகாப்பாக மாற்று வழியில் ஆத்தூருக்கு அனுப்பி வைத்தோம்.

**- கி.முகுந்தன், கழகப் பொதுக்குழு உறுப்பினர், பெரம்பலூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## நம் வரலாறு

### வகுப்புவாரி உரிமைக்கு ஆதரவும் எதிர்ப்பும்!

1950-ஆம் ஆண்டில், சென்னை மாகாணத்தின் வகுப்பு வாரி ஒதுக்கீட்டினை, அரசியல் சட்டத்தின்படி செல்லாது என உச்சநீதிமன்றம் அறிவித்ததால், அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என பெரியார், அண்ணா ஆகியோர் குரல் எழுப்பினர். அரசியல் சட்டத்தை திருத்தக்கூடாது என இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி ஆகிய ஏடுகள் எழுதின. பார்ப்பனர் அல்லாதவர்களால் நடத்தப்பட்ட ஏடுகள் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என குரல் கொடுத்தன.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.